(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 10546** **Sub. Code : CMTA 51**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2023.

Fifth Semester

Tamil – Core

இலக்கணம் – அகப்பொருள்

(For those who joined in July 2021 – 2022)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. சிறப்புப் பாயிரம் எத்தனை வகைப்படும்

(அ) 2

(ஆ) 6

(இ) 5

(ஈ) 8

2. 'வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவையவை சேர்தரும் இடனே' எதன் வரையறை?

(அ) முதற்பொருள் (ஆ) நிலம்

(இ) பொழுது (ஈ) கருப்பொருள்

3. கற்பில் நிகழும் பிரிவின் வகை

(அ) 3 (ஆ) 5

(இ) 6 (ஈ) 8

4. 'ஒருவன் தனக்கே உரிமை பூண்டு, வருகுலப் பரத்தையர் மகளிராகிக், காமக்கு வரைந்தோர் —————'.

(அ) காதற்பரத்தை

(ஆ) சேரிப்பரத்தை

(இ) இற்பரத்தை

(ஈ) காமக்கிழத்தியர்

5. யாழோர் கூட்டத்தின் இயல்போடு ஒத்திருப்பது

(அ) பிரிவு (ஆ) கற்பு

(இ) ஓதல் (ஈ) களவு

6. பாங்கற் கூட்டத்தின் வகை

(அ) 10 (ஆ) 11

(இ) 8 (ஈ) 7



Nesamony Memorial Christian College, Marthandam

7. 'உரவோன் கிழத்தியைக் குரவர் கொடுப்பமையும் கொடாமையும் ————————'

(அ) அறத்தொடு நிலை

(ஆ) வரைவு

(இ) கற்பு

(ஈ) குறைநயப்பித்தல்

8. களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவிகள்

(அ) போக்கு

(ஆ) மீட்சி

(இ) கற்பொடு புணர்ந்த கவ்வை

(ஈ) இம்மூன்றும்

9. 'மகிழ்வும், ஊடலும் ஊடலுணர்த்தலும், பிரிவும், பிறவும்' கொண்ட அக வாழ்க்கை

(அ) களவு (ஆ) கற்பு

(இ) பிரிவு (ஈ) வரைவுகடாதல்

10. தலைவன் பிரியும் காரணம்

(அ) ஓதல் (ஆ) காவல்

(இ) தூது (ஈ) இம்மூன்றும்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) அகப்பொருளின் வகையையும் கூற்றுமுறையையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்களைச் சான்றுடன் விவரிக்க.

12. (அ) கற்பின் வகைகளை விவரித்துச் சிறப்பிலக்கணம் கூறுக.

(அல்லது)

(ஆ) செலவழுங்கல் என்றால் என்ன? இலக்கணம் தருக.

13. (அ) கைக்கிளையின் நான்கு வகைக்கு இலக்கணம் கூறுக.

(அல்லது)

(ஆ) 'பிரிவுழிக் கலங்கல்' – இலக்கணம் தருக.

14. (அ) வரைவின் பொதுவிலக்கணங்கூறிக் கிளவித் தொகையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மீட்சியின் வகையையும் விரிவையும் விளக்குக.



[P.T.O.]

Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) ஓதல் பிரிவுக்குரிய கிளவிகளை இலக்கணஞ்சுட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) பரத்தையிற் பிரிவையும் அதற்குரிய கிளவிகளையும் வெளிப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) 'ஆற்றுறத் தோன்றும் அறத்தொடுநிலையே' – இலக்கணம் கூறி வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) முல்லைத்திணையின் முப்பொருளையும் நம்பியகப் பொருள் வழி நிறுவுக.

17. (அ) கற்புக்கால பிரிவுகளையும், அதற்கு உரியவர்களையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஊடல் தணிவிக்கும் வாயில்களில் பாணர், கூத்தர், விறலியர் ஆகியோருக்கு இலக்கணம் தருக.

18. (அ) களவு வாழ்க்கையில் 'பாங்கற் கூட்டம்' பெறுமிடத்தை இலக்கணப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பகற்குறியின் வகையை இலக்கணத்துடன் விரித்துரைக்க.



19. (அ) உடன்போக்கின் வகை மற்றும் விரியை இயம்புக.

(அல்லது)

(ஆ) உடன்போக்கின் பின் செவிலித்தாய் புலம்பற்குரிய மொழிகளை விரிவாக முன்வைக்க.

20. (அ) கற்பின் இலக்கணம் கூறிக் கிளவித் தொகையை விளக்குக.

(அல்லது)

(ஆ) உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள் யாவை? இலக்கணப்படுத்துக.

———————



Nesamony Memorial Christian College, Marthandam